

சேலம் கிழக்கு மாவட்டம் தி. மு. க. சார்பில் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகம் தளபதி மு. க. ஸ்டாலின் அறிவாலயம் முன்பு பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் மலர் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன், முன்னாள் எம்.எல்.ஏ., தமிழ்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், வக்கீல் மனோகரன், பேரூர் செயலாளர்கள் பாபு, செல்வம், பாலமுருகன், சோமசுந்தரம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்ட

# மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!

அரியலூர்,செப். 17-

அரியலூர் மாவட்ட திமுக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி கலந்தாய்வு கூட்டம் (19.09.2024) வியாழக்கிழமை மாலை 03.00 மணி அளவில் அரியலூர் புறவழிச் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற உள்ளது.



மாநில பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா, மாநில மகளிர் அணி வலைத்தள பொருப்பாளர் ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி, மற்றும் மகளிர் தொண்டரணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் வலைதள பொறுப்பாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டுகிறேன்.

அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1, மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை.

2, இளம் பெண்கள் பயிற்சி பாசறை.

3, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# முத்துப்பேட்டை ஒன்றியத்தில் முப்பெரும் விழா!

## மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகளை பூண்டி. கலைவாணன் வழங்கினார்!

திருவாரூர்,செப்.17-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றிய திமுக சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில் மண்ணின் மைந்தர் முத்தமிழர் கலைஞர் நூற்றாண்டு விழா, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், கிளைக் கழகங்கள் தோறும் கொடியேற்று விழா என முப்பெரும் விழாவாக நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் இரா மனோகரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில், மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

திருவாரூர் மாவட்டம் முழுவதும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா எழுச்சியோடு நடைபெற்று வருகிறது. முத்துப்பேட்டை ஒன்றிய தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, முன்னோடிகளுக்கு பொற்கொடி வழங்கும் விழா, கழக கொடி ஏற்றுதல் விழா என முப்பெரும் விழாவாக நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. விழா தலைமை ஏற்றார். ஒன்றிய செயலாளர் இரா மனோகரன் வரவேற்புரையாற்றினார்.


மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளையராஜா, மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ்,பேரூர் கழக செயலாளரும் மாவட்ட துணை செயலாளருமான எம்.எஸ்.கார்த்திக், ஒன்றிய குழு உறுப்பினர் அமுதா மனோகரன், மாவட்ட துணைச் செயலாளர் எம். ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப. ஆடலரசன், ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், ப.பிரகாஷ், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் உள்ளிட்டோர் விழா முன்னிலை ஏற்றனர்.

இந்த விழாவில் வேப்பஞ்சேரி, பின்னத்தூர், நாச்சிகுளம், மேலபெருமழை, இடும்பாவனம் உள்ளிட்ட முத்துப்பேட்டை ஒன்றிய கழகப் பகுதிகளில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களால் கழக கொடி ஏற்றப்பட்டு கல்வெட்டுகள் திறக்கப்பட்டன.

புதிதாக பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட்டிருந்த அங்கன்வாடி மையங்களை மாவட்ட கழக செயலாளர் பூண்டி கலைவாணன் திறந்து வைத்தார். பின்னர் நடைபெற்ற விழாவில் கழக மூத்த முன்னோடிகள் 109 பேருக்கு பொற்கிழிகள் வழங்கப்பட்டது விழா நிறைவில் 1500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவுடன் அன்னதானம் நடைபெற்றது,

விழாவில் மாவட்ட ,ஒன்றிய, பேரூர், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர். விழா நிறைவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ். ஐயப்பன் நன்றியுரை ஆற்றினார்

# கருஞ்சட்டை நாயகரே! கைகூப்பி வணங்குகின்றோம்!



பேரியக்கம் கண்டவரே!
பெரியார்க்கும் பெரியாரே!
ஆரியத்தின் அடிவேரை
அறுத்தெறிந்த கூர்வாளே!
பூர்வஜென்ம விதிப்பயனைப்
பொய்புரட்டுப் பழங்கதையைச்
சூரியத்தீக் கோளமெனச்
சுட்டெரித்த செஞ்சுடரே!

சிக்கனத்தை விதைத்தவரே!
சீர்திருத்தம் படைத்தவரே!
கொக்கரித்த வைதீகக்
கோட்டைகளை உடைத்தவரே!
எக்கணத்தும் வருணத்தை
எதிர்த்தவரே! எவ்விதத்தும்
மக்களுக்குத் தீமைதந்த
மடமைகளைத் தகர்த்தவரே!

அண்டபகி ரண்டத்தை
ஆண்டவனார் லோகத்தை,
கண்துயிலும் கோலத்தைக்
கடவுள்வண்ட வாளத்தைக்
கொண்டுவந்து நேர்நிறுத்திக்
குத்தீட்டிக் கேள்விகளால்
துண்டுபல துண்டாக்கித்
தோலுரித்துப் போட்டவரே!

மூவர்களை, முனிவர்களை,
முப்பத்து முக்கோடித்
தேவர்களை, தேவியரைத்
தெய்வீகப் புருஷர்களை
ஏவிவிட்ட புராணத்தை,
இதிகாசக் குப்பைகளைத்
தீவிறகு மூட்டிவைத்துத்
தெருவில்போட்டு எரித்தவரே!

மூத்திரப்பை பழுதாகி
முதுகுவடம் பாழாகி
நீத்துஉயிரை விடும்நேரம்
நெருங்கிவந்தும் சோராமல்,
சூத்திரனைப் பஞ்சமனைச்
சுடுசொல்லால் அவமதித்த
சாத்திரத்தை இறுதிவரை
சவுக்கால் அடித்தவரே!

"ஓர்குலத்துக் கொருநீதி"
உரைத்ததனால் வரநேர்ந்த
பேரிழப்பைத் தடுத்தவரே!
பெருமுயற்சி எடுத்தவரே!
கேரளத்தில் வைக்கத்தில்
கீழ்ச்சாதி எனப்பட்டோர்
ஊர்நடுவில் நடப்பதற்கும்
உரிமைபெற்றுக் கொடுத்தவரே!

சரஞ்சரமாய் தொடர்கணைகள்!
சனாதனத்தின் விமர்சனங்கள்!
வருஞ்சுமைகள் என்றறிந்தும்
வரலாற்றைப் புதுப்பிக்க
நெருஞ்சிமுள்ளில் நடந்தவரே!
நெருப்பாற்றைக் கடந்தவரே!
கருஞ்சட்டை நாயகரே!
காலத்தின் தூதுவரே!

பத்துத் தலைமுறைக்குப்
பணம்,சொத்துச் சுகமிருந்தும்
மெத்தைமலர்ப் பஞ்சணையை
மேல்துண்டு போல்உதறி
எத்தனைவெஞ் சிறைவரினும்
ஏற்றுக் கிடந்தவரே!
சத்தியத்தை நிலைநிறுத்தும்
சமதர்மப் போர்க்களத்தில்
எத்தனைவெஞ் சிறைவரினும்
ஏற்றுக் கிடந்தவரே!

பெண்ணுக்கு முன்னுரிமை!
பேச்சுரிமை! எழுத்துரிமை!
கண்முன் அரங்கேறக்
களங்கள் அமைத்தவரே!
கைம்பெண் மறுமணமும்
காதல் திருமணமும்
பைம்பொன் பரிசுபெறப்
பாதை வகுத்தவரே!

படுக்கையறைப் பதுமைகளாய்
பயன்பாட்டுக் கருவிகளாய்
அடுக்களையின் அடிமைகளாய்
அடங்கிக் கிடந்தபெண்கள்
தடுப்பணைகள் அனைத்தையுமே
தவிடுபொடி யாக்கிவிட்டு
மிடுக்குநடை போட்டுவர
விடுதலைபெற் றளித்தவரே!

தடியசைய உடலசையத்
தவழ்காற்றில் வெண்தாடி
முடியசைய நாடெங்கும்
முழக்கமிட்ட அரிமாவே!
கொடியசையத் தேர்மீது
கொலுவிருக்கும் வேந்தனைப்போல்
நெடியமக்கள் ஊர்வலத்தில்
நீந்திவந்த பேரழகே!

ஊழ்வினையை நம்பியவர்
உறக்கம் கலைத்தவரே!
வீழாமல் நடக்க, விடி
வெள்ளியாய் முளைத்தவரே!
தாழாமல் எந்தமிழர்
தலைநிமிரக் களப்போரில்
வாழ்நாள் முழுவதையும்
வழங்கிவிட்டுப் போனவரே!

வள்ளுவனார் எழுத்துக்கும்
வள்ளலார் கருத்துக்கும்
கொள்கை உருக்கொடுத்த
கோமானே! குலப்பகைவர்
எள்ளல் இழிவுரையை
எட்டி உதைத்தவரே!
அள்ளிக் கயமைகளை
ஆழப் புதைத்தவரே!

நாயினுக்கும் கீழாக
நமைப்பேதப் படுத்திவிட்டு
வாயடித்து, நம்தமிழர்
வயிற்றிலும் அடித்துவிட்டுப்
பாய்விரித்த "மனுதர்மம்"
நீயடித்த அடியால்தான்
நிர்மூலம் ஆனதையா!

விஞ்சும்இட ஒதுக்கீடு!
வேல்விழியார் சொத்துரிமை!
அஞ்சாமல் கொண்டுவந்த
"அர்ச்சகர் சட்டம்" வரை
வஞ்சகத்தை வென்று, செயல்
வடிவம் கொடுத்து, உங்கள்
நெஞ்சில் இருந்தமுள்ளை
நீக்கியவர் "கலைஞர்"அன்றோ!

ஆதவன்போல் ஒளிவீசி
ஐயா, நீ போட்டுவைத்த
பாதையிலே இலட்சியப்
பயணம் நடத்திவரும்
மேதகு முதல்வர்! "முத்து
வேல்கருணா நிதிஸ்டாலின்"
சாதனையின் நல்லாட்சிச்
சரித்திரம் தொடருதையா!

ஆலயத்துக் குள்ளேயே
அனுமதிக்கப் படாதவர்கள்
கோலமிகு அர்ச்சகராய்
கொண்டாடப் படும்அந்தக்
காலம்இதோ வந்தது!உங்கள்
கனவுநன வானதையா!
ஞாலம்உங்கள் திருப்பெயரை
நன்றிசொல்லி வணங்கும்ஐயா!

சாயாத இமயமெனச்
சரியாத வானமென,
ஆயிரம் பிரளயத்தும்
அழியாத கல்வெட்டாய்
தாயகத்தும் அயலகத்தும்
தந்தையே! உமதுபுகழ்
தூயமக்கள் உள்ளத்தில்
சுடர்வீசித் திகழும்ஐயா!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி**
**செப்டம்பர் 17 (2003)**



கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### உ.மதிவாணன், ஜி.மனோகரன் பங்கேற்பு!க.இராஜேந்திரன் வரவேற்புரை!

# நாகை ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, செப்.17-

நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகையில் யாழிசை மஹாலில் நடைபெற்றது. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் ஆர்.சீனிவாசன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியச் செயலாளர் க.இராஜேந்திரன் வரவேற்றார். மாநில மீனவர் அணி துணைச் செயலாளரும், மாவட்ட பிரதிநிதி ஜி.மனோகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் வி.திருநாவுக்கரசு, என். பிச்சை, ராஜேஸ்வரிராமலிங்கம், பொருளாளர் ஆர். காமராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.கே.தமிழ்ச்செல்வம்ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன்தாஸ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் வி.மகா ராஜன், மீனவர் அணி துணை அமைப்பாளர் பெரு.மதியழகன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் தமிழ்வாணன், மாவட்ட மீனவர் அணி துணைத் தலைவர் சுந்தரவேல், ஒன்றியக் குழு துணைத்தலைவர் மலர்விழி செல்லப்பன், ஒன்றிய குழு உறுப்பினர் மாலதிதமிழ்வாணன், ஊராட்சி மன்ற தலைவர்கள், எம்.முருகானந்தம், மகேஸ்வரன், கணேஷ்குமார், சேகர், லெட்சுமிபாலகிருஷ்ணன் மற்றும் ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தல் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி 40க்கு 40 வெற்றி கனிபறித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது என்றும், நாகை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வாரஜ் வெற்றிக்கு உழைத்திட்ட நாகை தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், சட்டமன்ற தேர்தலில் 13 முறை நின்று வென்று 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பெறுப்பு ஏற்று தமிழக மக்களுக்கு பல்வேறு நல திட்டங்களை கெண்டு வந்து தமிழக மக்களின் வாழ்வை உயர செய்த முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கு கலைஞர் உருவம் பொறித்த, தமிழ் வெல்லும் என்ற வரிகளோடு நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசிற்கும், கோரி பெற்ற கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மகளிருக்கு ரூ. 1,000, மகளிருக்கு பேருந்தில் இலவச விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், மக்களுகளுடன் முதல்வன் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் ஆட்சி 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதியில் பெருவாரியான வாக்குகளை பெற்றிட நாகை தெற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும், கழக அரசின் திட்டங்களை, சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்திற்கு வாக்குகளாக மாற்றிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சேலம் கிழக்கு மாவட்டம் மல்லூர் பேரூர்க் கழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்த தினத்தையொட்டி கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு பேரூர்க் கழக பொறுப்பாளர் ந.சுரேந்திரன் இனிப்புகள் வழங்கினார் உடன் பேரூர்க் கழக நிர்வாகிகள் இருந்தனர்.